## பிரபஞ்சம் - பூமி உருவாக்கங்களில் மனிதர்களின் பங்கு
## பாரதத்தின் வரைவுகள்

இந்த பிரபஞ்சத்தின் தோற்றம், வரலாறு ஆகியவற்றை ஒருவராலும் அறுதியிட்டுச் சொல்ல இயலாது. எல்லையில்லாத வான் மண்டலம் அதனுள் இருக்கும் நட்சத்திரங்கள், கண்டுபிடிக்கப்பட்ட, கண்டுபிடிக்கப்படாதக் கோள்கள் என பல அதிசயங்கள் நிறைந்தது இப்பேரண்டம். இதில் பூமி என்ற கோளில் மனிதர்கள், இதர விலங்குகள் தாவரங்கள் என உயிரினங்கள் பிறந்து வாழ்ந்து இறந்துவருகின்றன.

இவ்வுயிரினங்கள் போக எண்ணற்ற உயிரற்ற பொருட்கள் இப்பூமியின் வளங்கலாக, இவ்வுயிரினங்களுக்கு முக்கியமாக மனிதர்களுக்கு அவர்களின் மேம்பாட்டுக்குப் பயன்பட்டுவருகின்றன. இக்கோள் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும், ஒருகுறிப்பிட்ட கால அளவுகளில், பாதையில் சுற்றும் தன்மையுடையது என்பதை நமக்கு சிறு வயதில் இருந்தே பள்ளிக்கூடங்களில் பல வகுப்புகளில் பயிற்றுவித்திருக்கிறார்கள்.

இப்பூமி உருண்டையானது, தன் மேற்பரப்பிற்கு மேலே ஒரு குறிப்பிட்டத் தூரம் வரையிலும் உள்ளவற்றை தன்னை நோக்கி இழுத்துக்கொள்ளும் புவியீர்ப்பு தன்மையுடையதாக விளங்குகிறது. இதனாலேயே மனிதர்களும் மற்றவைகளும் பூமியின் மேற்பரப்புகளில் ஒட்டிக்கொண்டு, ஓடிக்கொண்டிருக்க முடிகிறது.

இந்த மேற்பரப்பினில் ஆங்காங்கே நீர் நிறைந்த பாகங்களும், நீரில்லாத பாகங்களுமாக பரவலாக பிரிந்து கிடக்கின்றது. பலவித இயற்கை கரணங்களினால் பல ஆயிரம் ஆயிரம் வரலாற்றுக் காலத்தில் பூமியில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். முன்பு நிலப்பரப்பு கூடுதலாகவும், நீர்பரப்பு (கடல்) குறைவாகவும் இருந்து காலப்போக்கில் நிலப்பரப்பினை கடல் ஆட்கொண்டு குறைத்து பல பல சிறு அளவுகளில் நிலப்பரப்பு பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக வந்த எண்ணற்ற பிரிவுகளைக் கொண்ட நிலப்பரப்புகளை பலதரப்பட்ட இன, மொழி, மக்களின் எஜமானர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றன. இப்பிரிவுகளுக்கு இடையில் நில ஆக்கிரமிப்பு போன்ற செய்கைகளால் பல போர்கள் நிகழ்ந்தேறி மனிதர்கள் மாண்டுபோய் மண்ணிற்குள் போயினர் அல்லது புகையாயினர்.

கால மாறுபாடுகளின் ஓட்டத்தில் பல ஆட்சிமாற்றங்களுக்குப் பிறகு நிலப் பிரிவுகளுக்குள் கூடுவது, குறைவது போன்றவை ஆக்கிரமிப்புகளால் நடந்தேறியது. ஒவ்வொரு பிரிவும் தனித்தனி பெயரில் நாடுகளாக கருதப்பட்டன. பல நாட்டு மன்னர்கள் ஆட்சியாளர்கள் மக்கள் குழுக்கள் தங்கள் நாட்டு நிலப்பரப்பை பெரிதாக்கும் எண்ணத்தில் அண்டை நாடுகளுடன் சண்டைகள் போட்டு, அங்குள்ள நிலப்பரப்பை தங்களுடன் சேர்த்திருக்கிறார்கள், அல்லது தங்களது நிலப்பரப்பை இழந்திருப்பார்கள்.

இதன் உச்சக்கட்டமாக இங்கிலாந்து, பிரான்ஸ், போர்ச்சுக்கள், ஜெர்மனி, நெதர்லாந்த், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாட்டினர் மற்ற நாடுகளை போர் மற்றும் தந்திரக்கொள்கை மூலமாக கைப்பற்றி இருந்தனர். அந்நாட்டு மக்களை அடிமைத்தனமாக நடத்தினர். இவ்வாறு அடிமையாகிப் போன நாடுகளுள் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் குறிப்பிடத்தக்கவை.

இன்றைய இந்தியா மற்றும் அதனைச்சுற்றியுள்ள அத்தனை நாடுகளும் இறுதியாக வெள்ளை ஏகாதியப்பத்தியத்தின் கீழ் ஆட்சிசெய்யப்பட்டவை என்பது தெரிந்ததே. நீண்ட பல போராட்டங்களுக்குப் பிறகு இங்கிலாந்துக்காரர்களிடமிருந்து இவைகள் ஒவ்வொன்றாக சுதந்திரம் பெற்றன. ஒவ்வொரு நாட்டிலும் எண்ணற்ற வகையிலான வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத மனிதக்கொடுமைகள், மனிதக்கொலைகள் நிகழ்ந்தப்பிறகு வெள்ளைக்காரப்பேய்கள் இந்த நாடுகளை விட்டுச்சென்றன என்ற நாம்கூறக்கேட்கிறோம்.

வெள்ளைக்காரர்கள் விடுதலைக் கொடுத்தப்பிறகு பல நாடுகளுக்கு என்றென்றைக்கும் உண்மையான முழு விடுதலை கிடைத்திடா வண்ணம் பல சூழ்ச்சிகளைச் செய்துவிட்டுப்போனார்கள். இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாக இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதைக் கூறவேண்டும். எக்காலத்திற்கும் சண்டைப்போட்டுக்கொண்டு பெரிய அளவில் பொருளாதார முன்னேற்றம் அடைந்திடாமல் மேலை நாட்டினரைவிட எப்போதும் மிகக் கீழேயே இருப்பதற்கு முன்னேற்பாடு செய்துவிட்டுப்போனார்கள். இந்த நாடுகளுக்கு கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதியை மேலை நாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்குமாறு செய்து தங்கள் கஜானாவை தொடர்ந்து நிரப்பிவருதற்கு வழிவகை செய்துகொண்டார்கள். மேலும் இந்நாடுகள் சண்டைப்போட்டுக்கொண்டு அதன் தீர்வுகளுக்காக தங்களிடம் அலைய வைப்பதற்கும் தந்திரம் செய்துவைத்துச் சென்றார்கள்.

இந்திய பகுதியை மதரீதியாக இருக்கூறுகளாக துண்டாடுவதற்கு முதலில் தூண்டுகோளாக இருந்தவர்கள் வெள்ளைக்காரக் கிழக்கிந்திய கம்பெனியார். இந்தியப் பகுதிக்கு சுதந்திரம் கொடுத்தப்போது அதுவரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த மன்னராட்சி பகுதிகளை இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய ஏதேனும் ஒரு நாட்டுடன் வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம், அல்லது தனித்தனி நாடாகவும் இருக்கலாம் எனக்கூறி பெரும் இடைஞ்சல் செய்திருந்தார்கள். இந்தியப் பகுதிகளில் அடங்கிய பல மன்னராட்சிப் பகுதிகளை கட்டாயப்படுத்தி, சண்டையிட்டு மிரட்டி ஒருங்கிணைப்பு செய்யலாயிற்று. இவைகளையும் தாண்டி ஜீனாகத், ஹைதராபாத், காஷ்மீர் ஆகிய மூன்றும் தனி நாடுகளாக இருக்க விருப்பம் தெரிவித்தன.

...........

வானத்திலிந்து வானவர்கள் எவரும் இந்தந்த அளிவினில் இந்தந்த நாட்டுக்கு எல்லைகள் என வரையறுத்து வைக்கவில்லை. முதலில் முண்டா தூக்கியவர்களும் பின்னர் ஆயுதம் ஏந்தியவர்களும் பல நாடுகளின் பல பகுதிகளை பதம்பார்த்தனர். மேலும் தந்திரம், அபரிமித அன்பு, பலவகை லஞ்சங்கள், சுகங்கள் கொடுத்து பல நிலங்களை அபகரித்தனர். மேலும் இந்த நாடுகளாகவே தங்களுக்கு பெயர் வைத்துக்கொண்டு தங்கள் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இடத்தை ஒதுக்கி எல்லைகளை வகுத்துக்கொள்ளவில்லை. அனைத்தும் மனிதசெயல்களின் மூலம் உண்டாக்கப்பட்ட வரைவுமுறைகள்தான். இச்செயல்கள் போர்கள். அபகரிப்புகள், ஆக்கிரமிப்புகள், ஏமாற்று தில்லுமுல்லுகள், திருட்டுத்தனங்கள், இரகசிய ஒப்பந்தங்கள், லஞ்சங்கள் போன்றவைகளால் பல நாட்டு எல்லைகள் விரிவுப்படுத்தப்பட்டன அல்லது சுருக்கப்பட்டன.

இம்மாதிரியாக இந்தியாவிற்கு விடுதலைக்கு முன்னர் சரியாயான எல்லை விஸ்தீரன அளவு இருந்தது என்று கூற முடியாது. இன்றைக்குள்ள இந்தியாவின் நிலப்பரப்பு உண்டான விதத்தில் பல உண்மைகளும், பொய்களும் மற்றும் ஏமாந்தவைகளும் எல்லாம் இருக்கக்கூடும். வெள்ளைக்காரர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாவில் குடியாட்சிமுறை அமுலுக்கு வந்தது. அதன்பிறகு மன்னர்கள், சர்வாதிகாரிகளுக்கு சொந்தமாயிருந்த சில நாடுகள் மாற்றம்பெற்று அனைத்தும் மக்களுக்கு உரிமையுள்ளதாக ஆயிற்று.

தனி மனிதர்களுக்கு இருக்கும் எல்லா குணங்களும் மனிதர்காளல் நிர்வகிக்கப்படும் நாடுகளுக்கும் இருக்கிறது. வட்டிக்கு கடன் வாங்குவது, கொடுப்பது, ஏமாற்றுவது, நட்டக்கணக்கு காட்டுவது சூழ்ச்சி, நயவஞ்சகம், பெருமைபேசுவது, பொறாமைப்படுவது, ஏமாற்றிப்பெறுவது என அனைத்தும் இதில் அடக்கம். அம்மாதிரியே மண்ணாசையாக நிலப்பரப்பை அதிகரிக்கும் பேராவலும் நிலவுகிறது. இருபதாம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியில்தான் நாடுபிடிக்கும் குணங்களில் ஓரளவுக்கு நாகரீக நடைமுறையை பல நாடுகள் பின்பற்றின எனக்கூறலாம். அதற்கு முன் வலிமையுள்ளவர்கள் பலவகை முறைகளை கையாண்டு தங்கள் நிலப்பரப்புகளை பெரிதாக்கி பெரிய நாடாக தோற்றமளிக்க முயற்சிசெய்துகொண்டிருந்தார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை சுதந்திரத்திற்கு முன்னர் பலரக மன்னர்களின் ஆட்சியின்கீழ் பல பிரிவுகளாக இருந்தது இந்நாடு. ஆங்கிலேயர்கள் இவர்களை அடிமைப்படுத்தி கப்பம் வாங்கிக்கொண்டு தங்கள் பிரதிநிதிகாளாக இம்மன்னர்களை ஆட்சிபுரிய அனுமதித்திருந்தனர். விடுதலைப்போராட்டத்தின் விளைவாக விடுதலை கொடுத்துக்செல்லும்போது, எஞ்சியிருந்த மன்னர்களிடம் அந்தந்தப் பகுதிகளை கொடுத்தனர்.

சில மன்னர்கள் தாங்களாக தங்கள் நிலப்பகுதிகளை ஒருங்கிணைந்த இந்தியாவுடன் சேர்த்துவிட்டனர். சிலரை போர்தொடுத்துப் பெறவேண்டியதாயிற்று. மீதம் இருந்த காஷ்மீர், ஹைதராபாத், ஜீனாகத் ஆகியவை இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் சேர்த்துக்கொள்ளலாம் அல்லது தனி நாடாகவே இருக்கலாம் என்று உரிமை கொடுக்கப்பட்டுவிட்டது.

……….

இன்றைக்கு உலகின் மிக அதிக மக்கட்தொகை கொண்ட நாடுகளான சீனாவும், இந்தியாவும் அவைகளின் விடுதலைக்குப்பின் இருவேறு மார்க்கங்களை கடைபிடித்தன. சீனா கம்யூனிசத்தையும், இந்தியா ஜனநாயக சோசலிசத்தையும் பின்பற்றின. இதனால் அடிப்படையிலேயே இருநாடுகளுக்கு இடையில் கருத்து வேறுபாடு தோன்றலாயிற்று. ஆசிய கண்டத்தில் உள்ள நாடுகளுள் இவை இரண்டிற்கும் மக்கள் தொகையும், நிலப்பரப்பும் அதிகமாக இருந்ததால் இப்பிராந்தியத்தின் தலைமைப்பதவிக்கு இருநாடுகளுக்கும் இடையில் போட்டி இருந்தது, இன்றும் இருந்தவருகின்றது. நிலப்பரப்பின்படி பார்க்கையில் சீன நாட்டிற்கு முதல் நிலை இருந்திருக்க வேண்டும். ஆனால் மேலை நாடுகள் ஆரம்பகாலம் தொட்டே தந்திரமாக காய் நகர்த்தல்களை செய்து வந்திருக்கின்றனர். சீனா பெரிய நாடாக இருந்த போதிலும் கம்யூனிசக் கொள்கையை கொண்டிருந்ததினால், மேற்கத்திய வல்லமைப்பொறுந்திய நாடுகள் சீனாவின் விடுதலைக்குப்பின் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இந்தியாவையும், நேருவையும் முன்னிலைப்படுத்தினர்.

இதனால் இந்தியாவைவிட பெரிய நாடான சீனா இந்தியாவின் மீது உள்பகைக்கொள்ள ஏதுவாயிருந்தது. மேலும் சீனா ஆரம்பகாலங்களில் இந்தச்சூழ்நிலையைப் பற்றியும், உலகநாடுகளின் பிரச்சினைகளையும், பெரிது படுத்திக்கொள்ளவில்லை. மாறாக தன்னாட்டு வளர்ச்சியில் மிகஅதிக கவனம் செலுத்தியது. அத்துடன் முக்கியமாக இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு உதவி செய்து அவைகளிடம் இந்தியா முக்கியத்துவம்பெற்று முந்தவிடாமல் தந்திரம் செய்து அவைகளின் நட்பைப்பெற்றது. குறிப்பாக பாகிஸ்தான், நேபாளம், பர்மா இலங்கை ஆகிய நாடுகள் இன்றுவரையில் இந்தியாவைவிட சீனாவை அதிகம் நேசிக்கின்றன.

இந்தியா அணிசேரா அமைப்பின் முக்கியஸ்த்தர்களாக இருந்துக்கொண்டு உலக நாடுகளின் பிரச்சினைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை கொரியப்பிரச்சினை, சூயஸ்கால்வாய் சிக்கல் போன்றவைகளில் தீர்வுகாண்பதற்கு உகந்த காரியங்கள் செய்து வந்தது. ஆனால் தன்னைச்சுற்றியுள்ள நாடுகளில் சீனாவின் முக்கியத்துவத்தை மிஞ்சும் வகையில் செயல்பாடுகள் இல்லை. இதனால் அண்டைநாடுகளுள் உண்மையான நட்பு நாடுகள் இல்லாமல் போயிற்று. பூட்டான், மாலத்தீவுகள் மிகச்சிறிய நாடுகள் மட்டுமே இந்தியாவிடம் நட்பு பாராட்டி வருகின்றன. இவைகளால் எந்த தாக்கமும் ஏற்பட வாய்ப்பு இல்லை. இந்தியாவின் உதவியால் தனி நாடாக உருவாகிய பங்களாதேஷ் கூட சில சிக்கல்கள், சூழ்நிலைகளால் அவ்வப்போது பகைமை பாராட்டி வருகின்றது.

இந்தியாவின் இன்றை நன்மை, தீமை ஆகிய இரண்டு நிலைமைகளுக்கும் முக்கியக்காரணமாக முதல் பிரதமமந்திரி ஜவகர்லால்நேருவைச் சொல்லலாம். 1947 முதல் 1964 வரையிலான காலத்தில் இந்தியாவின் அயல் உறவை நடத்திச் சென்றது ஜவகர்லால்நேரு என்ற தனி மனிதரும் அவரது விருப்பங்களுமே ஆகும்.

வெள்ளையர் இப்பிராந்தியத்திற்கு விடுதலைக் கொடுத்தப்போது சில நிரந்தர சிக்கல்களை கொடுத்துவிட்டு போனார்கள். இஸ்லாமியர்கள் அதிகமாக இருந்த மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் ஆகியவற்றை ஒரே ஆளுகைக்குள் வருமாறு செய்தார்கள். இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடையில் இந்தியாவின் நிலப்பகுதி இருந்ததால் இது திட்டமிட்டு செய்த சதியாகக் கருக்கூடிய வாய்ப்பு உள்ளது.

மேலும், இஸ்லாமியர்கள் அதிகமாக உள்ள காஷ்மீரை அதன் மன்னர் ஹரிசிங் தனிநாடாக வைத்துக்கொள்ள உரிமையாக்கப்பட்டது. ஜீனாகத் என்ற இந்துக்கள் அதிகம் வாழும் பகுதியை பாகிஸ்தானுடன் இணைக்க அதன் இஸ்லாமிய மன்னர் முடிவுசெய்தார். அப்போது அங்குஏற்பட்ட மக்களின் உடன்பாடின்மை சிக்கல்களால் அப்பகுதியின் நவாப் அப்பகுதியை இந்தியாவின் நிர்வாகத்தில் இணைத்தார்.

பின்னர் ஜீனாகத் பகுதியினை இந்தியா உரிமைக்கொண்டாடிய போது பாகிஸ்தான் எதிர்ப்புதெரிவித்தது. இப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபை வரைகொண்டுபோனது. அங்கு அவர்களின் வழிகாட்டுதலின்படி அப்பகுதியில் கருத்துக்கணிப்பு ஓட்டெடுப்பு செய்தபோது அம்மக்கள் இந்தியாவுடன் இணைவதை விரும்பியதால், இப்பிரிச்சினை ஒருவழியாக முடிவிற்கு வந்தது.

ஹைதராபாத்தின் நிஜாம் தன் நாட்டை தனிநாடாக இருக்கும் என அறிவித்து இந்தியாவுடன் உடன்படிக்கை செய்துக்கொண்டார். இருப்பினும் இந்தியாவின் நிலப்பரப்புகளுக்கு நடுவில் உள்ள ஒரு சிறிய பகுதியாக ஹைதராபாத் இருந்ததால் அதனை இந்தியாவுடன் இணைத்துவிட வேண்டும் என்பதில் வல்லபாய்பட்டேல் போன்ற தலைவர்கள் குறியாக இருந்தனர். அதற்கான வாய்ப்புகளை எதிர்பாத்திருந்தனர், அச்சமயத்தில் அப்பகுதியில் ‘ரசாக்கர்ஸ்ல்’ என்னும் இனத்தவர் இந்துக்களுக்கு பல கொடுமைகள் இழைத்து துன்புறுத்திவந்தனர். இதைப்பொறுத்துக்கொள்ளாத இந்தியா நிஜாம் மீது காவல்துறை மூலமாக நடவடிக்கை எடுத்தது.

இது சம்மந்தமாக நிஜாம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலிடம் புகார் கொடுத்தார். உண்மையை ஆராய்ந்தபோது அங்கு நடந்தத் தவறுகள் தெரியவந்தன. மேலும் மேலை நாடுகளிடம் இந்தியாவின் செல்வாக்கு அப்போதைக்கு அதிகம் இருந்தது. கவுன்சிலின் அறிவுரைப்படி குற்றம் இழைத்தவர் மீது நடவடிக்கை எடுக்க சம்மதித்தனர். அச்சமயத்தில் பாகிஸ்தான் இந்தியாவையும், நிஜாமையும் கடுமையாக குறைகூறி விமர்சித்தது.

காஷ்மீரில் மக்கள் படும் துன்பத்தைக்கண்டு மன்னர் ஹரிசிங் பாகிஸ்தானுடன் பேச முனைந்தபோது காஷ்மீரை தங்களுடன் இணைத்துக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினர். அரசர் அதற்கு உடன்படாததால் மேலும் பல புதியத் தொல்லைகளைக்கொடுக்க ஆரம்பித்தனர். தன் நாட்டு மலைவாழ்மக்கள் பலரை காஷ்மீரில் ஊடுறுவி குடியேறுமாறு செய்தது பாகிஸ்தான். 15.10.1947 அன்று சுமார் 5000 ஆக்கிரமிப்பாளர்கள் காஷ்மீரின் ஓவென் கோட்டையை கைப்பற்ற முயற்சித்தனர். இந்த ஆக்கிரமிப்பாளர்களில் மலை வாழ்மக்கள் தோற்றத்தில் படை வீரர்கள் பலரும் இருந்தனர். இதனால், காஷ்மீர் மன்னர் வேறு வழியின்றி இந்திய அரசின் உதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்திய அரசு அவரிடம் காஷ்மீரை தங்களுடன் இணைத்துக்கொண்டால் மட்டுமே அந்நாட்டிற்கு தேவையான அனைத்து உதவிகள் மற்றும் பாதுகாப்பை வழங்கமுடியும் என்ற நிபந்தனையை தெரிவித்தது,

இச்சூழ்நிலையில் காஷ்மீர் மன்னருக்கு பாதுகாப்பு மற்றும் உதவிகளுக்காக யாருடனாவது இணைவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருந்தது. பாகிஸ்தானைவிட இந்தியாவே மேல் என்ற முடிவுக்குவந்து, இந்தியாவுடன் சில நிபந்தனைகள் மற்றும் தனி சிறப்பு உரிமைகளுடன் இணைவதற்கு இசைவு தெரிவித்தார். இதற்கு பல காரணங்கள் இருப்பினும் பாகிஸ்தானின் ஆவேச அவசர ஆக்கிரமிப்பு மனப்பான்மை, மன்னர் ஹரிசிங் இஸ்லாமியர் அல்லாதவராக இருந்தது, நேருவிடம் இருந்த நட்பு போன்றவை காரணங்களாக கூறப்பட்டன.

மன்னர் ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க விரும்பியபோது அங்கிருந்த பெரும்பான்மை இனமான இஸ்லாமிய மக்களில் பெருமபான்மையோர் இந்தியாவுடன் இணைவதை விரும்பவில்லை என்று சொல்லப்பட்டது, மேலும், அவர்கள் காஷ்மீர் தனி நாடாக இருப்பதையே முதலாவதாகவும் அதற்கு அடுத்த நிலையில் பாகிஸ்தானுடன் இணைவதையும் விரும்பியிருந்தனர் என்றும் கூறப்பட்டது. காஷ்மீரில் வாழ்ந்த பண்டிட் இன மக்கள் காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதை மிக ஆர்வமாகக் கொண்டாடினர்.

இறுதியாக 26.10.1947 அன்று காஷ்மீர் இந்தியாவோடு இணைய விரும்புகிறது என்பதை ஓர் உடன்படிக்கை மூலம் தீர்மானிக்கப்பட்டது. உடனடியாக இந்தியப்படைகள் காஷ்மீருக்குள் புகுந்து பாகிஸ்தானிய ஊடுருவலை தடுத்து நிறுத்தியது, அன்றிலிருந்து காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக மாறியது.

இந்த இணைப்பை பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ளாமல் கடுமையாக சாடியது. மேலும், காஷ்மீரை தனது நாட்டுடன் இணைத்துக்கொள்ளும் முயற்சியை நிறுத்தவில்லை. 27.10.1947 அன்று பாகிஸ்தானிய படைவீரர்கள் காஷ்மீர் எல்லைக்குள் புகுந்து கலவரத்தில் ஈடுபட உத்தரவிடப்பட்டது. பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியா, பாகிஸ்தான் நிர்வாகப் பொறுப்புகளில் அப்போது இருந்துகொண்டிருந்ததால் அவர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நிறுத்துமாறு கூறினர். அவர்களை எதிர்த்துப்பேச போதுமான நிலையில் இல்லாததால் பாகிஸ்தான் தங்கள் படைகளை விலக்கிக்கொண்டது. ஆயினும் தொடக்கத்தில் ஆக்கிரமிப்பு செய்த பகுதிகளில் தன் படைகளை நிறுத்தி அங்கிருந்து விலகிச் செல்ல பாகிஸ்தான் மறுத்துவிட்டது.

காஷ்மீர் பிரச்சினை இருநாடுகளாலும் பல முறை ஐ.நா.சபையிடம் முறையிடப்பட்டது. பல சமயங்களில் பலநடுவர்கள் நியமிக்கப்பட்டு இதற்காக பணியாற்றினர். இருப்பினும் இருநாடுகளுக்கும் ஏற்புடைய தீர்ப்பை தரமுடியவில்லை. இரு நாடுகளுக்கும் சாகதபாகமான முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

**ஐ.நா.வின் முக்கியமான மூன்று தீர்மானங்கள் :**

1. காஷ்மீரில் உள்ள பாகிஸ்தான் படைகளாயினும் அல்லது வேறெந்த தீய சக்திகளாயினும் காஷ்மீரை விட்டு வெளியேறவேண்டும்.
2. காஷ்மீரைக் காப்பதற்கான இந்தியாவின் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது.
3. ஜம்மு காஷ்மீர் அரசு தனது சொந்தப்பொறுப்பில் காஷ்மீர் மக்களின் கருத்துக்கணிப்பபை நடத்தவேண்டும்.

பாகிஸ்தான் அதன் படைகளை விலக்கிக்கொள்ளாததை காரணம் காட்டி இந்தியா கருத்துக்கணிப்பை நடத்தாமல் தள்ளிப்போட்டது, அன்றைய நிலையில் கருத்துக்கணிப்பின் முடிவு இந்தியாவிற்கு பாதகமாக இருந்திருக்கும் வாய்ப்பு இருந்ததாகக் கூறப்பட்டது.

இதற்கிடையில் இந்திய அரசு காஷ்மீரில் நடைபெற்ற ஷேக்அப்துல்லாவின் ஆட்சியை அகற்றியது. அவர் காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைப்பதைக்கோரி ஆதரித்துவந்ததால் தேசவிரோச செயல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இந்திய அரசு இணைந்து செயலாற்றும் மக்கள் பேரவை பெருவாரியான உறுப்பினர்களின் ஆதரவோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பாகிஸ்தானின் கோபத்தை அதிகமாக்கியது. காஷ்மீர் மக்கள் பேரவையின் ஒப்புதலோடு காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுவிட்டதால் கருத்துகணிப்பு தேவையற்றது என இந்தியா கூறியது.

காஷ்மீர் மாநில அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பிரிவு 'ஜம்முகாஷ்மீர் மாநிலம் இந்திய கூட்டாச்சியில் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாக இருக்கும், அவ்வாறு இப்போது இருக்கிறது' என்ற வாசகத்தைக் கொண்டு விளங்குகிறது.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையில் பிணக்குகள் தொடர்ந்து விரோதம் வளர்ந்த வண்ணமாகவே இருந்து வந்தது. 1962ல் நடந்த சீன இந்தியப்போர் காஷ்மீர் பிரச்சினையை சிக்கலாக்கியது. இப்போரின்போது பாகிஸ்தான் வெளிப்படையாகவே சீனாவிற்கு ஆதரவாக இருந்தது. சீனா திடீரென இந்தியாவின் மீது படையெடுப்பு நடத்தியதற்கான காரணங்களுள் முக்கியமானதாக காஷ்மீரை இந்தியா இணைத்துக்கொண்டதால் ஏற்பட்ட பொறாமை, வெறுப்பு, சினம் போன்றவையாகும். ஏனெனில், சீனா தீபெத்தை ஆக்கிரமிப்பு செய்தபோது, முதலில் இந்தியா எதிர்ப்பு தெரிவித்தது. அதன்பிறகு ஆக்கிரமிப்பு செய்து இராணுவ ஆட்சியை நிறுவியபோது இந்தியா காஷ்மீர் சிக்கலை மனதில் வைத்துக்கொண்டு கண்டுகொள்ளாமல், தலையிடாமல் விட்டுவிட்டது.

1962ல் சீனப்படையெடுப்புக்குப்பின் இந்தியா சிலப்பகுதிகளை சீனாவிடம் இழந்தது. இந்தியா இச்செயலைக் குறைக்கூறியபோது இந்திய சீன எல்லைகள் ஒருபோதும் நிரந்தரமாக வரையறுத்துக்கொள்ளவில்லை என சீனா கூறிவிட்டது. அடுத்தப்படியாக பாகிஸ்தானும் சீனாவின் உதவியுடன் இந்தியாவின் மீது 1965ம் ஆண்டு படையெடுப்பு நடத்தி காஷ்மீரை மீட்டுவிட முயற்சி செய்தது.

இந்தியா ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலிடம் முறையிட்டு பாகிஸ்தான் படைகள் ஆக்கிரமிப்பு பணிகளைவிட்டு விலகவேண்டும் எனக்கூறியது. ஆனால் பாதுகாப்பு கவுன்சில் பாகிஸ்தானை ஆக்கிரமிப்பு செய்வோர் என இந்தியா கூறுவதை தவறு என்றது. ஐ.நா.விடம் வெறுப்பு ஏற்பட்டபின் தன் படைபலத்தின்மூலம், பாகிஸ்தானை வீழ்த்துவது ஒன்றே வழி என இந்தியா கருதியது. இந்தியா தீவிரமாக போரில் இறங்கியது. இருபத்திமூன்று நாட்கள் நடந்த அப்போர் அமெரிக்க, ரஷ்யா, ஐ.நா.சபை ஆகியவற்றின் முயற்சியால் நிறுத்தப்பட்டது.

ரஷ்யப் பிரதமர் பாகிஸ்தான் அதிபரையும், இந்தியப் பிரதமர் லாக்பகதூர் சாஸ்திரியையும், ரஷ்யாவின் தாஷ்கண்ட் நகருக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். 10.01.1966ம் நாள் இந்தியா பிடித்திருந்த அஜிபூர் பகுதியில் சில இடங்களையும், பாகிஸ்தான் பிடித்திருந்து சாம்பு பகுதியின் சில இடங்களையும், எதிரெதிர் நாடுகளிடம் ஒப்படைக்க உடன்பட்டனர். இரு நாடுகளும் வன்முறை போர் ஆகிய நடைமுறைகளை கைவிட ஒப்புக்கொண்டனர்.

தாஷ்கண்ட் நகரில் சாஸ்திரி அவர்களின் திடீர் மரணம், அவ்வொப்பந்தத்திற்கு முழுமையான விளைவை அளிக்காமல் போயிற்று.

காஷ்மீர் ஏனைய இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடைப்பட்ட பகுதி என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஜம்மு என்னும் மலைப்பிரதேசமும், லடாக் என்னும் குன்றுப்பிரதேசமும் அடங்கியப்பகுதி காஷ்மீர் ஆகும். காஷ்மீரும் லடாக்கும் இந்தியாவில் உள்ளன. பல்திஸ்தான், கில்ஜிட், ஹன்சாநாகர் என்னும் மலைவாழ் நகர் பகுதிகள் பாகிஸ்தானில் உள்ளன. பூஞ்ச் என்னும் குன்றுப்பிரதேசம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இருபகுதிகளாக பிரிந்து கிடக்கின்றன.

இந்த காஷ்மீர் பகுதி உலகின் மிக ஆபத்தான பகுதியாக அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் கருதுகின்றன. மூன்றாம் உலகப்போர் என ஒன்று உருவாகுமானால் அதற்கு இக்காஷ்மீர் பிரச்சினை ஒருமுக்கிய காரணமாக இருக்கலாம். இதற்கு இணையான இன்னொரு உலகப்பிரச்சினை இஸ்ரேல் பாலஸ்தீன மத்திய கிழக்காசிய சிக்கலாக இருக்கும். உலகிலுள்ள மற்ற அனைத்து பிரச்சினைகளும், மத்திய கிழக்காசிய சிக்கல் உட்பட தீர்க்கக்கூடியதே. ஒவ்வொரு காலகட்டத்திலும் உலகின் பலப்பகுதிகளில் பல சிக்கல்கள் ஏற்பட்டு மெல்லமெல்ல அவைத் தீர்க்கப்பட்டு அமைதி ஏற்பட்டுவருகிறது. ஆனால், என்றைக்குமே தீர்க்க இயலாத ஒன்று உண்டெனில் அது காஷ்மீர் பிரச்சினையே ஆகும்.

ஏனெனில், தீர்வுக்காக மூன்றாம் நாடு ஒன்றின் தலையீட்டை இந்தியா விரும்பவில்லை. அது இந்தியாவிற்கு கௌரவப் பிரச்சினை என்பதோடு பாதகமாகிவிடும் என்ற காரணமாகவும் இருக்கலாம். இந்தியா பெரிய நாடு என்றும், மிக வேகமாக வளர்ந்துவருகிறது என்றும், பெருமைப் பேசப்படுவது வேறு இருக்கிறது.

பாகிஸ்தான் என்பது தனிப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட நாடு எனக்கூற இயலாது. நிலப்பரப்பில் ஓர் எல்லைகளைக் கொண்ட தனி நாடேயொழிய அது சில நாடுகளின் கைப்பாவையாக உற்ற நண்பனாக இருந்து அவைகளின் அபிலாசைகளை பூர்த்திசெய்து வருகிறது. குறிப்பாக இன்றைய தேதியில் சீனாவின் முதல்நிலையில் உள்ள நட்பு நாடு பாகிஸ்தானே ஆகும். சீனா பாகிஸ்தானுக்காக எதையும் செய்யும் நிலையில் உள்ளது.

பாகிஸ்தான் மூலமாக இந்தியாவை அண்டவிடாமல் வைத்திருக்கிறது சீனா. காஷ்மீரில் அதன் மன்னர் இந்தியாவுடன் இணைத்தபோது காஷ்மீரைக் கேட்டு பாகிஸ்தான் போராடிக்கொண்டிருக்கிறது. ஒருவேலை இப்பிரச்சினை பின்வருமாறு தீர்க்கப்பட்டிருக்கலாமோ என என்ன வைக்கிறது. அதாவது, மேற்குபாகிஸ்தான், கிழக்குபாகிஸ்தான் என இரு நிலப்பிரிவுகள் ஒரே நாடாக இந்தியாவிற்கு முறையே வடக்கு மற்றும் தெற்குப்பகுதிகளில் இருந்துகொண்டிருந்தன. மேற்குபாகிஸ்தான் ஆட்சியாளர்கள் கிழக்குபாகிஸ்தானை இரண்டாந்தர நிலையில் நடத்திவந்தார்கள். பின்னர் அங்கு புரட்சி போராட்டங்கள் எல்லாம் ஏற்பட்டு அதில் இந்தியாவும் சேர்ந்து மேற்குபாகிஸ்தானிடம் போரிட்டு, கிழக்குபாகிஸ்தான் பகுதியை தனி நாடாக பங்காளதேஷ் என உருவாக்கப்பட்டது.

எப்படியும் என்ன விலைக்கொடுத்தாவது காஷ்மீரை இந்தியாவோடு இணைத்துவிட வேண்டும் என்ற சில தலைவர்களின் செயல் இந்த உலகம் உள்ளவரையிலும் பல இந்தியர்களை தூங்கவிடப்போவதில்லை. ஆயிரக் கணக்கான உயிர்களை பலிவாங்கிக்கொடிருக்கப்போகிறது. கோடானகோடி செல்வங்கள் போருக்காக, போரின் ஏற்பாடுகளுக்காக எக்கணமும் செலவிடப்பட்டுக்கொண்டிருக்கும் நிலை இருந்துகொண்டிருக்கப்போகிறது. உலகின் இராணுவத் தளவாடத் தயாரிப்புகளின் நல்ல விற்பனை மையமாக இப்பிராந்தியம் தொடர்ந்து இருந்துவரும். பொருளாதார முன்னேற்றம் என்பதை இச்செலவுகள் குறைத்துக்கொண்டே இருக்கும்

மேற்கத்திய நாட்டினர் சீனா, ரஷ்யா போன்றவைகள் என்னாலும் மகிழ்ந்துகொண்டிருக்கும். ஓநாய் அழுகிற மாதிரி செயல்களை இவர்கள் செய்துகொண்டிருப்பார்கள். இப்பிராந்திய பிரச்சினையை உண்மையில் முடிவிற்கு கொண்டுவரும் எண்ணம் இவர்களுக்கு இல்லை. இரு நாடுகளுக்கும் இடையில் இலேசாக உறவு நட்பு வருவது போல் தெரிந்தால் உடனே அமெரிக்க, சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் தங்களுக்கு விருப்பமான நாடுகளுக்கு எப்போதோ கோரப்பட்ட ஆயுதங்களை, உதவிகளை வழங்குவார்கள், பெரும் நிதிக்கொடுப்பார்கள், தலைவர்கள் வந்துபோவார்கள். உறவு, நட்பு மேலும் வளரும் விதமாக அதைப்பற்றி பேசாமல் வேறு நடவடிக்கைகளை பற்றிப் பேசி இவ்விடயத்தில் கவனக்குறைவு, ஆர்வக்குறைவை ஏற்படுத்தி திசைத்திருப்பிச் செல்வார்கள்.

‘கெடுவான் கேடு நினைப்பான்’ என்பது போல இந்த மேலை நாடுகளின் நய வஞ்சகமான செயல்களினால் பின்னாளில் அவர்களே பாதிக்கப்படப்போவது நிதர்சனம். மூன்றாம் உலகப்போர் என்ற உலக அழிப்பு நடவடிக்கை வந்தால் அணு ஆயுதப்போர் ஏற்பட்டு உலகத்தின் பெரும்பகுதி அழிந்துவிடலாம். இந்தியாவையும் சீனாவையும் அழிப்பதற்கு அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி நாடுகள் முயற்சிக்கலாம். அந்நிலையில் இறுதியில் சீனா, இந்தியா இடையே நட்பு ஏற்பட்டு இவைகளுடன் பாக்கிஸ்தான், இலங்கை, ஆசிய நாடுகள் ரஷ்யா, ஆப்பிரிக்க நாடுகள் மத்திய கிழக்கு நாடுகள் இணைந்து போரிடும் நிலை வரலாம். ஒருவேளை இக்கூட்டமைப்பில் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளும் வந்துசேரும் வாய்ப்பு உள்ளது.

ஆங்கிலேய வெள்ளைக்காரர்கள் உலக மக்களுக்கு முன்னர் செய்த கொடுமைகளுக்காக இங்கிலாந்து நாடு முதலாவதாக அழிக்கப்படலாம். அதுவரையில் இப்போது இருப்பது போன்ற சிறு சண்டைகள், சச்சரவுகள் நிகழ்ந்துகொண்டிருக்கும். ஆயுத வியாபாரங்கள் அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவது, முன்னேற்ற முட்டுக்கட்டை போன்றவைகளை வளர்ந்த நாடுகள் செய்துகொண்டிருக்கும். அவ்வப்போது பல அறிவிப்புகள், பயணங்கள், திட்டங்கள், சில உதவிகள் போன்ற நாடகங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கும்.

சீனாவும் இந்தியாவை அதிக அளவில் முன்னேறவிடாமல் பாகிஸ்தானைக்கொண்டு காயை நகர்த்தும். இந்தியாவோ, சீனாவின் வளர்ச்சியை மனதில் வைத்து பொருளாதார போராட்டம் போட்டு ஒரு பங்கு உயர்வு வந்தால், அவ்வாறு தெரிந்தால் பல மடங்காக பேசும். இதனால் அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் சீனா மற்றும் இந்தியாவை நெருங்கிவிட முடியாமல் இரு பக்கமும் அந்தந்த சூழ்நிலையில் தூக்கி, இறக்கி வர்ணித்து செயல்படும்.
........

காஷ்மீர் பிரச்சினை தீர்ந்துவிட்டால், இந்தியாவிற்கு மட்டும் அமைதி என்றில்லாமல் உலகத்திற்கே அமைதி ஏற்படும் என்றபோதிலும் அவ்வப்போது ஆளும் ஆட்சியாளர்கள் வெற்றிகரமாகச் செயலாக்கும் வழிகளைப்பற்றிக் கவலைப்படாமல், தங்கள் காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

இந்தியாவில் எவ்வளவோ பிரச்சினைகள் முன்னேற்றத்திற்காக அவசரமாக செய்யவேண்டிய செயல்கள் இருந்தும் அவற்றை செய்யவில்லை. தன் தலையிலேயே மண்ணை வாரிப்போட்டுக்கொள்வதற்கு சமமாக பாபர் மசூதியை இடித்து பிரச்சினையை மேலும் பெரிதாக்கிக்கொண்டார்கள். ஏதோ ஒரு காலத்தில் அங்கு ராமர் கோவில் இருந்ததாகவும் அதை இடித்துவிட்டு அங்கு பாபர் மசூதி கட்டியிருப்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அதைப்பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் தொலைந்துபோகிறது என்று விட்டுவிட்டு வேறு நல்லதொரு இடத்தில் ராமருக்கு கோவில் கட்டிக்கொள்ளலாம்.

சுதந்திரத்திற்கு முந்தைய பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை தூசு தட்டி எடுத்து செயல்படுத்துவது அறிவுடைமை ஆகாது. வரலாற்றில் ஆயிரம் ஆயிரம் சம்பவங்களில் முன்னால் மன்னர்கள் ஆட்சியாளர்கள் பல கொடுமைகள், கொலைகள், கொள்ளைகள், சித்ரவதைகள், அழிப்புகள், இடிப்புகள் என பலவற்றை நிகழ்த்தியுள்ளார்கள். அதற்கெல்லாம் இப்போது பரிகாரம் காண எண்ணுவது நன்றன்று. எத்தனை மசூதிகளை இடித்து கோயில்களைச் கட்ட முடியும். இன்றை சூழ்நிலையில் அறிவியல்பூர்வமான முன்னேற்றத்திற்கு எது உகந்ததோ, அமைதிக்கு எது ஏற்றதோ, அதை நடைமுறைப்படுத்துவதே நல்லது.

உதாரணமாக சுதந்திரத்திற்கு முன் வெள்ளையர்கள் இங்கு செய்த கொடுமைகள், கொலைகள், கொள்ளைகள், அழிப்புகள் இவற்றிற்கு இப்போது பழிவாங்க நடவடிக்கை எடுக்க இயலுமா. அது சாத்தியமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இஸ்லாமியர்கள் பாபர் மசூதி இடிப்பை ஏதோ ஒரு கெட்ட கனவாக நினைத்து அதை மறந்துவிட்டு தங்கள் சமுதாய முன்னேற்றங்களோடு தாங்கள் வாழும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் செயல்படலாம். குற்றம் இழைத்தவர்களை மன்னிக்கும் மாண்பை பெற்றவர்களாகலாம். அதை விடுத்து அதையே பெரிதுப்படித்தி மன அமைதியைக் கெடுத்துக்கொள்வது நிரந்தர மனநோயாளி ஆக்கிவிடும். இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்களில் பலர் நாட்டுப்பற்று அற்றவர்களாக இருப்பதாக இந்துக்கள் பலர் கருதப்படும் நிலை மாறவேண்டும். இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட், ஹாக்கி விளையாடும்போது இந்தியா வெற்றிபெறுவதில் ஆர்வமாக இருக்கலாம். அதைவிடுத்து சிலர், மத உணர்வோடு பாகிஸ்தான் வெற்றிபெற நினைப்பது மேலான செயல் ஆகாது.

காஷ்மீர் விவகாரத்தை இந்தியா எப்படி கையாளப்போவது என்பது தெரியவில்லை. பாகிஸ்தானும் சீனாவும் இதை விடுவதாக இல்லை. அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் காலகாலத்திற்கு இங்கு ஆயுதம் விற்கப்படும் நிலை மாறப்போவதில்லை. இறுதியாக ஒருநாள் அணு ஆயுத உலகப்போர் ஏற்படப்போவதும் தவிர்க்கப்படப் போவதில்லை. எந்தபொருளை செய்தாலும் அது அழிக்கும் பொருளாக இருந்தாலும்கூட அவற்றை நீண்ட காலத்திற்குச் செயல்படுத்தாமல் வைத்திருக்க முடியாது. அணு ஆயுதம் வைத்திருக்கும் ஏதேனும் ஒரு நாட்டு ஆட்சியாளர் ஒரு சீற்றமான சூடாகிப்போன மனநிலையல் விரோதி நாட்டின்மீது ஒரு நாள் அணு ஆயுதத்தை பயன்படுத்திவிடும் அபாயம் உள்ளது. அப்போது ஆரம்பமாகிவிடும் அணு ஆயுதப்போர்; எல்லா காலத்திய ஆட்சியாளர்களும் எல்லா நேரத்திலும் மன அமைதியுடன் விளங்குவார்கள் என எதிர்பாக்க இயலாது.

சிக்கிம் நாடு இந்தியாவுடன் இணைந்தபோது சீனா கடும்கோபம் கொண்டது. பூட்டான் மன்னரிடம் அவருடைய நாட்டையும் இந்தியா இணைத்துக்கொள்ளும் என எச்சரித்தது. இருப்பினும் அது நடைபெறாமல் பூட்டான் தனி நாடாக இருப்பதற்கு இந்தியா அங்கீகரித்தது. பங்களாதேஷ் உருவாக்கப்பட்டபோது இந்தியா அதை தன்னுடன் இணைத்துக்கொள்ளும் என எச்சரிக்கப்பட்டது. மேலும் சீனாவுடனான பர்மிய எல்லைப் பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கு இந்தியாவுடன் உள்ள உறவை முறித்துக்கொள்ள வகைசெய்து இந்தியாவிற்கு இந்தியர்களை பர்மாவிலிருந்து விரட்டி அனுப்புவதற்கு வழி செய்தது. இலங்கைக்கும் சீனா அபரிமிதமான பொருளாதார முன்னேற்ற உதவிகள் செய்து இலங்கையை இந்தியாவின் நிழல் பகையாளி ஆக்கியது. அதற்கு அங்கிருந்துவரும் மிகச்சிக்கலான தமிழர்கள் பிரச்சினை மிக சாதகமாக அமைந்தது.

நேபாளம் என்ற இந்து நாடு பாகிஸ்தானுக்கு அடுத்தப்படியாக இந்தியாவிற்கு மிக ஆபத்து விளைவிக்கக்கூடிய சூழல் உள்ள நாடு. அது தானாக இந்தியாவிற்கு எதிராக எதுவும் செய்ய முடியாவிட்டாலும் இந்தியாவை சீனாவிடம் காட்டிக்கொடுத்துவரும் நாடாக இருந்துவருகிறது. சீனாவிடம் நேபாளம் மிக நெருங்கி இந்தியாவின் வெளிப்படையான பகையாளி ஆகிவிடக்கூடாது என்பதற்காக இந்தியா நேபாளத்திற்கு இயன்றவரை பொருளாதார உதவி செய்துவருகிறது. இவ்வாறாக நேபாளம் சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளிடம் நன்றாக கறந்துவருகிறது. இவ்வாறு இல்லையெனில் நேபாளம் என்ற நாடு ஆப்பிரிக்க கண்டத்தின் மிக ஏழைநாடுகளான எத்தியோப்பியா, சோமாலியா ஆகியவற்றைவிட மோசமான நிலையில் இருக்கும் தன்மைப் பெற்றது.

இந்நேபாள நாடு இந்தியாவிற்கு அடுத்தப்படியாக இருக்கிற ஒரே இது நாடு என்பது தெரிந்ததே. இது வடக்கில் நம் தோற்பகுதியில் இருந்துகொண்டு படுத்துகிற பாடு வலியில்லாமல் சிறிது சிறிதாக ஊசி மூலம் விஷம் ஏத்துவது மாதிரியானது. இந்நாட்டு மக்கள் இந்தியாவுக்குள் வருவதற்கு விசா பாஸ்போர்ட் ஆகியவை தேவைப்படுவதில்லை. அவர்கள் சாலை வாகனங்கள் மூலமாக கால்நடையாக இந்தியாவுக்குள் எளிதாக வந்துவிடுவார்கள். கூர்க்கா காவலாளி வேலை, இதர கீழ்நிலை தொழிலாளர்கள், விபச்சாரத்தொழில், நைலான் குளிர் ஆடைகள் விற்பது போன்றவை இவர்களது முக்கியத் தொழில்களாக இந்தியாவில் நடந்தேறி வருகின்றன.

இருப்பினும் இந்தியர்கள் நேபாளம் செல்வது வேறுறொரு வெளிநாட்டிற்கு செல்லும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியர்களுக்கு பாஸ்போர்ட் வேண்டியிருக்கிறது. இவற்றிற்கான காரணங்களாக சிலவற்றை சொல்கிறபோதும் அவை நியாயமாகப்படவில்லை.

இந்த நேபாளம் இந்தியாவின் நண்பனைப்போல் இருக்கும் ஒரு மறைமுக நிழல் பகையாளி. இவர்கள் சராசரி இந்தியர்களைக் காட்டிலும் நிறம், குணம், தோற்றம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் சீனர்களை கூடுதலாக ஒத்திருக்கிறார்கள். எனவே சீனமக்களிடமும் கூடுதலான அன்பை வைத்திருக்கிறார்கள் என்பது உள்ளுணர்ந்து ஆராயும்போது அறிய வருகிறது. இதனால் இவர்கள் இந்தியாவிடமிருந்து பலவற்றை அனுபவித்துக் கொண்டிருந்தாலும் சீனாவிடமே மிகுந்த நம்பிக்கை மிகுந்தவர்களாக இருப்பதாக கூறப்படுகிறது. இவர்கள் சீனர்களுக்கு ஒற்றர் வேலை செய்வதாகவும் கருதப்படுகிறது.

என்றபோதிலும் இந்த ஏழை எளிய நாட்டை இந்தியா பகைத்துக்கொள்ளவே இயலாது. அந்நாட்டின் நட்பை வெளிப்படையாக முழுவதுமாக இழந்துவிட்டால் இந்தியர்களுக்கு எதிரான சீனாவின் முழுச்செயல்பாடு இந்திய எல்லைப்பகுதிக்குள் வந்து நாம் மீளமுடியாத துயரத்திற்கு தள்ளப்பட்டுவிடுவோம். எனவே, பாசாங்கு உறவையாவது இந்தியா கொண்டாடியாகவேண்டும். பல நாடுகள் இதை செய்துகொண்டிருந்தாலும் இவற்றை எந்நாடும் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை.

பர்மா போன்ற நாடுகளாலும் இந்தியாவிற்கு நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே அதிகம் விழைகின்றன. இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களின் தீவிரவாதிகள் பர்மாவிற்குள் சர்வசாதாரணமாக போய்வந்து இந்தியாவிற்கு எதிரான தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதை அடுத்து ஆப்கானிஸ்தான் என்ற குழப்பமான நாடு பாகிஸ்தானுக்கு அடுத்து உள்ளது, இந்த இரு நாட்டு எல்லைப்புறங்களே உலகத்தின் ஒட்டுமொத்த தீவிரவாதத்திற்கும், போதைப்பொருட்கள் கடத்தலுக்கும் புகலிடமாக விளங்கிவருகிறது. இங்குள்ள தீவிரவாதிகளுக்கு பணக்கார இஸ்லாமிய நாடுகளிலிருந்து மிதமிஞ்சிய நிதிகள் தரப்படுகின்றன என்பதை பலரும் கூறிவருகின்றனர்.

இவை ஒருபுறமிருக்க இன்னமும் சீன, இந்திய எல்லைகள் சரிவரநிர்ணயித்துக்கொள்ளவில்லை. 1962ம் ஆண்டு சீன படையெடுப்பினால் இந்தியாவின் நிலப்பரப்புகள் சிலவற்றை சீனா ஆக்கிரமித்துக்கொண்டது. அருணாச்சலப்பிரதேசத்தின் மீது அவ்வப்போது உரிமை கொண்டாடி பேசுவதை இதுவரை சீனா நிறுத்திக் கொள்ளவில்லை.

இலங்கை இந்தியாவிற்கு இடையில் தமிழர்கள் பிரச்சினை அதனால் இனக்கலவரங்கள், மீன்பிடித்தகராறுகள், திரிகோண மலையில் உள்ள அமெரிக்க தளம் போன்றவற்றால் பிரச்சினைகள் இருந்து வருகின்றன.

பங்களாதேஷ் உடன் பராக்கா அணை பிரச்சினை, நியூமர்தீவு, எல்லைப்பிரச்சினை, பங்களாதேஷ் மக்கள் இந்தியாவிற்குள் ஊடுறுவது போன்ற தொலைகள் இருந்துவருகின்றன.

நேபாளத்தில் சீன ஆதரவு போன்ற கம்யூனிஸ்ட்கள், மாவோ தீவிரவாத இயக்கம், நேபாள காங்கிரஸ் போன்றவைகள் எப்போதும் குழப்பமும், பிரச்சினைகள் கொண்டவைகளாக இருக்கின்றன. இந்நாடு இந்தியா, சீனா இவைகளுக்கிடையே பலவித விரோத சூழ்நிலைகளைப் பயன்படுத்தி இரு நாடுகளில் இருந்தும் பெரும் உதவியைப்பெற்று வருகிறது. இந்நாடு இந்தியாவிற்கு நட்பும், பகைமையும் கலந்த ஒரு உறவைத் தந்துகொண்டிருக்கிறது. இந்நாடு சீனாவிடம் அதிக நட்புகொண்டுவிட்டால் இந்தியாவிற்கு அதன்மூலம் பெரிய ஆபத்து வரலாம்.

மிக முக்கியமாக பாகிஸ்தான், இந்தியா இடையிலான உலகப்பிரச்சினை காஷ்மீர் சிக்கலாகும். இச்சிக்கல் தீர்ந்துவிட்டால் உலகில் நிச்சயமாக மூன்றாம் உலகப்போர் வராது என்று கூறமுடியும். அப்படி ஒன்று வந்தால் அது இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையேயான போராக ஆரம்பித்து பின்னர் கிறுத்துவர் இஸ்லாமியர்களுக்கு இடையேயான பெரும் போராக மாறும். மற்ற உலக நாடுகள் பங்கெடுத்துக்கொள்ளும் சூழ்நிலைவரும். அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்த்திரேலியா நாடுகள் ஒரு அணியாகவும், இந்தியா, சீனா, ரஷ்யா ஏனைய ஆசிய நாடுகள், இஸ்லாமிய நாடுகள் ஒரு அணியாகவும் நிற்கும் நிலை வரலாம். ஒருவேலை பிரான்ஸ், ஜெர்மனி மற்ற சில ஐரோப்பிய நாடுகள் ஜப்பான் போன்ற நாடுகள் கூட அமெரிக்காவிற்கு எதிராக மறு அணியில் நிற்கும் நிலை ஏற்படக்கூடும்.

உலகத்தின் பல நாடுகளுக்கு நேர்முக மறைமுக எதிரியாக, நிழல் பகையாளியாக அனாவாசிய அதிகாரம் செலுத்தி, பெருமைபலம் காட்டி மற்ற நாடுகளை மதிக்காமல் கொடுமைப்படுத்தும் நாடாக தற்போது அமெரிக்கா திகழ்ந்துகொண்டிருக்கிறது. சென்ற சில நூற்றாண்டுகள் உலகத்தில் பல நாட்டுமக்களை குறிப்பாக ஆசியா, ஆப்பிரிக்க கண்டத்து மக்களை கொடூர கொடுமைப்படுத்தி அடிமைப்படுத்தி கற்பழிப்பு கொலைகள் செய்த இங்கிலாந்து நாடு இதற்கு உடந்தையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, சென்ற காலத்து பாதிப்புகளுக்காக பழிதீர்த்துக்கொள்ளக்கூட பல நாடுகள் மனதில் எப்போதும் ஒரு வஞ்சம் கொண்டாதவே விளங்குகின்றன. சந்தர்ப்பம், பலம், ஆதரவு கிடைத்தால் இந்த பழிவாங்கல் நிகழ்வுகள் நடந்தேரலாம்.

சீனாவிடம் இந்தியா நட்புநாடாக மாறினாலொழிய இந்தியாவிற்கு சிக்கல்கள் இருந்துகொண்டே இருக்கும். இதைத்தான் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா ஏனைய ஆசியா ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. இருநாடுகளையும் சேரவிடாமல் அனைத்து நரிதந்திர வேலைகளும் உலக அரங்கில் நடந்துவருகின்றன. இதை இருநாடுகளும் முழுமையாக தெரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

சீனா இந்தியாவைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதோ, மதிப்பபோதோ இல்லை. அந்நாடு தன்னை மிகமிக வலுவாக உலகில் நம்பர் ஒன்றாக இன்னும் சில ஆண்டுகளில் கொண்டுவந்துவிடும். அதன்பிறகு பாகிஸ்தானைக்கொண்டு இந்தியாவை வீழ்த்துவது அதன் முதல் முக்கிய வேலையாக இருக்கக்கூடும்.

இந்தியாவிலும் அதற்கு ஏற்ற வகையினில் மக்கள் பிரிவுகள் இனக்கலவரங்கள், மாறிமாறி கொலைகள், மாற்றுமத விரோத நிகழ்ச்சிகள் என அனைத்தும் நடந்துவருகின்றன. எந்த நேரத்திலும் மிகவிரைவாக ஒருசில வாரங்களிலேயே இந்தியா முழுமைக்கும் மத துவேஷத்தை சிலர் ஏற்படுத்திவிடும் அபாயமும் உணர்வுப்பூர்வமான தூண்டுதல்களும் இருந்துவரும் மிகப்பெரிய ஆபத்துக்கள் இந்நாட்டுக்கு இருந்துகொண்டிருப்பது மிகவேதனையான விஷயம்.

இதை அவ்வப்போது ஆள்பவர்கள் புரிந்துகொள்ளாமல் ஏதேதோ பேசி அவரவர்களின் ஆட்சி காலத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள், பணம் சேர்க்கிறார்கள், பெண்களிடம் பாசம் காட்டுகிறார்கள், சல்லாபிக்கிறார்கள் மேலும் வாரிசுகளை மேன்மைப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பவர்கள் சிலர், ராஜா ராணி ஆட்சி செய்து மக்களை அடிமைகளாக நினைப்பவர்கள் சிலர் என இந்நாட்டில் எல்லாவகையான தலைவர்களும் இருந்துவருகின்றனர். மேலும், லஞ்சஊழல் எல்லாத்துறைகளிலும் இப்பெரிய மக்கள்தொகைகொண்ட நாட்டில் மலிந்து கிடக்கிறது. தலைமுதல் வால்வரை இந்தியா வல்லரசாகப்போகிறது என்பதையே பேசிக்கொண்டிருப்பது தேவையற்ற கேலிக்கூத்தாக எண்ணவேண்டியிருக்கிறது. உண்மையில் சீனா போன்ற வேகமாக முன்னேறும் நாடுகூட இப்படி பீற்றிக்கொண்டிருக்கவில்லை. இந்தியத் தலைவர்கள், ஆட்சியாளர்கள் இங்குள்ள சாக்கடைகள், சாலைகள், குப்பை கழிவறை சமாச்சாரங்களின் உண்மை நிலைகளை அடிமட்டத்தில் உணரும் நிலையில் இல்லை. இவைகளை ஓரளவிற்கு சரிசெய்வதற்கே கால் நூற்றாண்டுகாலம் தேவைப்படலாம். அவற்றைப்பற்றி கருதாமல் சில இடங்களில் சிலரால் சிலருக்கு மட்டும் பெருமை, பணம் சேர்க்கும் கணினி மென்பொருள் துறையை மட்டும் அதிகமாக தூக்கிவைத்துக்கொண்டு பேசுவதையே பேரியக்கமாக நடத்திவருகின்றனர்.

...............................

**இந்தியாவில் உட்பகுதிகள்**

அடுத்ததாக உள்நிலைகளைப் பார்ப்போம். இந்திய எல்லைகளுக்கு அப்பால் இருக்கும் அந்நியர்களைவிட இந்தியாவிற்குள்ளேயே இருக்கிற இந்தியர்களால்தான் மிகப்பெரும் சிக்கலான, சவாலான, சமாளிக்க இயலாத தொல்லைகள் இருந்து இந்தியாவை கசக்கிபிழிந்துகொண்டிக்கிறது எனலாம்.

இந்தியா என்பது ஒரு முழுநாடாக சுதந்திரத்திற்கு பின்பு உருவாக்கப்பட்டது என்பது பலர் அறிந்தது. இதற்கு இரும்புமனிதர்களாக வர்ணிக்கப்பட்ட வல்லபாய் பட்டேல் போன்றோரின் செயல்கள் வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும். சுதந்திரத்திற்கு முன்பு பேரரசர்கள், அரசர்கள், அரசிகள், சிற்றரசர்கள், குருநில மன்னர்கள், நிஜாம்கள், நவாப்கள், ஜமீன்தார்கள் போன்றோர் பல பாகங்களில் ஆட்சி செய்துவந்தனர். அவர்களின் ஆளுகைகளில் எண்ணற்ற எண்ணிக்கையில் பெரியது முதல் சிறியது வரையிலான தனித்தனி நிலப்பிரிவுகளாக இருந்தன. இப்படியாக இருந்த நிலப்பிரிவுகளை ஒன்றிணைத்ததில் பல சிக்கல்கள் உருவாயின. இன்றும் என்றும் தீராத தீர்க்க இயலாத அளவில் திகழ்ந்துகொண்டிருக்கின்றன.

பல மொழிகள் பேசும் மக்கள் பகுதி பகுதியாகப் பிரிந்துநின்றனர். இவர்களுக்குள் வேறுபட்ட கலாச்சாரங்கள், உணவுமுறைகள், வாழும் முறைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் வேறுபாடுகள் என பல சிக்கல்கள் இருந்தன. இவற்றையெல்லாம் கணக்கில்கொண்டு ஒரு நடுத்தலைமையின் கீழ் ஆளும்வகையில் சிறுப்பிரிவுகளாக அதாவது இப்போதுள்ள மாநிலங்களாகப் பிரிக்கும் அவசியம் ஏற்பட்டது.

இதில் அதிக ஆதிக்கம் செலுத்திய மொழிகள் விவகாரத்தினால் அதிகமாகப் பேசப்படும் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. இவ்வாறு பிரிக்கப்பட்டதினால் இன்றளவிற்கும் சில மாநிலங்களுக்கிடையே எல்லைப்பிரச்சினைகள் இருந்துவருகின்றன. அவ்வப்போது ஆங்காங்கே கலாட்டாக்கள், சண்டைகள், இத்தியாதிகள் நடப்பது ஆண்டுதிருவிழாக்கள் போல் ஆகிவிட்டன.

இவ்வாறு மொழி பேசும் முறையில் பிரிக்கப்பட்ட மாநிலங்களால் மக்கள் மாநில வாரியாக பிரிந்து கிடக்கிறார்கள் என்பது உண்மை. மாநிலத்தைச் சார்ந்த மக்களும் அதன் அரசும், அரசியல்வாதிகளும் அவரவர் மாநிலத்தை தனித்தனி நாடாகக் கருதி செயல்படும் அவலம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு மொழி வாரி அடிப்படையில் பிரித்திருக்காமல் தோராயமாக இயன்ற அளவிலான சம அளவு பரப்புகளில் இந்நாடு பிரிக்கப்பட்டிருந்தால் இன்றைய இவ்வகையிலான மனநிலையில் உள்ள மக்கள், தலைவர்கள் இருந்திருக்க மாட்டார்கள் எனத் தோன்றுகிறது.

தேசிய ஒருங்கிணைப்பு, ஒருமைப்பாடு என்ற வார்த்தைகளுக்கு தேவை ஏற்பட்டிருக்காமல் மாநிலப்பற்று உணர்வுகளை மிஞ்சி, பெருகிய தேசியஉணர்வு மக்கள் நெஞ்சங்களில் இருந்திருக்கக்கூடும் என்று எண்ணத்தூண்டுகிறது. இனிமேல் இதைப்பற்றி எண்ணுவது பலனில்லையாதலால் இருக்கிற முறையில் எப்படி சரிசெய்யலாம் என அரசியலார்கள் ஆலோசிக்கக் கடவது கடமையாகிறது.

மாநிலங்களுக்கிடையிலான பிணக்குகளில் முதன்மையானது நீர் பகிர்மானம். இதில் பிரச்சினை ஏற்பட்டு சில மாநிலங்களுக்கிடையில் என்றைக்கும் எவராலும் தீர்க்க இயலாத சிக்கலாக விளங்கிக்கொண்டிருப்பது ஒரு மகா சாபம். இதை சரிசெய்ய மாநிலங்களுக்கிடையிலான நதிகளை இணைப்பது என முடிவெடுத்து பல பத்தாண்டுகள் கடந்தும் ஒரு ஆக்கப்பூர்வமான செயல்பாடுகூட இதுவரை தென்படவில்லை. முதலில் தென்னிந்திய நதிகலையாவது விரைவாக இணைக்க ஏற்பாடுகள் செய்வது நன்று.

இப்போது ஒரு மாநிலத்துக்காரர் மற்றொரு மாநிலத்தில் பணிபுரிவது, வியாபரம் – தொழில் செய்வது, சில இடங்களில் பயணம் செய்வதுக்கூட சில சமயங்களில் இயலாதக் காரியமாகி வருகின்றது. அன்டை மாநிலத்துக் காரனை அண்டை நாட்டுக்காரனைப்போல பார்ப்பது இங்கு வழக்கமாகி இருக்கிறது. இதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று மாநிலங்களுக்கு இடையில் பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதாகும். மேலும் வடக்கு தெற்கு என வெளிப்படையான இரு பெரும் பிரிவுகளாக வேற்றுமையுடன் பிரித்துப்பேசப்படுகிறது. இதைப்போல மக்களுக்கிடையிலான கலாச்சார வேற்றுமைகள், திருவிழாக் கொண்டாட்டங்கள் மாறுபட்டுகிடக்கின்றன.

மக்கள் நிற வேற்றுமைகளாலும் வேறுபடுகிறார்கள். வடகிழக்கு மாநில மக்கள் நீண்டகாலமாக பொருளாதாரத்தில் பின்தள்ளப்பட்டார்கள். மஞ்சள் நிற இன மக்களான அவர்கள் இந்தியாவிற்கு அவ்வளவாக தொடர்பில்லாமல் பிரிந்து வாழும் மக்களாக சமீபகாலங்கள்வரை நிலைத்திருந்தார்கள் என்றே சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன. சென்ற ஓரிரு பத்தாண்டுகளாகத்தான் இந்திய மத்திய அரசு அங்கு அதிக கவனம் செலுத்தி மேம்பாட்டிற்கு முயற்சிசெய்துவருகிறது. இதற்குமுன்பு அவர்கள் நம் அரசியல் ஆதிக்கவாதிகளால் அவ்வளவாக கண்டுக்கொள்ளப்படவில்லை. இது வேறு விளைவுகளை உருவாக்கி வளர்த்துவிட்டிருக்கிறது. அனைத்து வடகிழக்கு மாநிலங்களிலும் அன்டை நாடுகளின் மறைமுக ஆதரவுடன் தீவிரவாதம் கொம்புசீவி விடப்பட்டு தனிநாடு கோரிக்கைகள், இன வேற்றுமைக் கொலைகள் அன்றாடம் நடந்துவருகின்றன. இது ஒரு தீராத் தலைவலியாகிப்போனது நிஜம். காஷ்மீர் தீவிரவாதிகள் ஒரு ரகம் எனில் இப்பகுதி தீவிரவாதிகள் இன்னொரு ரகம்.

மக்களின் நிற வேற்றுமைக்கான காரணங்களை ஆராய்ந்துப்பார்த்தால் பல அசிங்கங்கள் காத்துக்கிடக்கின்றன. உலக நாடுகளில் வேறு எந்த நாட்டிலும் இல்லா அளவிற்கு இங்கு மக்களின் தோல் நிறம் லட்சோப லட்ச வித்தியாசங்களில் வேறுபட்டுவிழிக்கின்றன. மற்ற நாடுகளில் கருப்பு, வெள்ளை, கருப்புவெள்ளை சேர்ந்து வெளிர்கருப்பு மற்றும் மஞ்சள் நிற மக்கள் அந்தந்த நாடுகளில் பெரும்பகுதியாக வாழ்கிறார்கள். இந்தியாவில் இது முற்றிலும் மாறுபடுகிறது.

வெள்ளை , சிவப்பு, கருப்பு, பழுப்பு, மஞ்சள் இவைகள் ஒவ்வொன்றிலும் லட்சக்கணக்கான உட்பிரிவு நிறங்களை மனிதர்கள் கொண்டுள்ளார்கள். ஒரு குடும்பத்திலேயே சகோதர சகோதரிகளுக்குள் நிற வேற்றுமைகள், வெளியிடங்களில் அருகில் இருக்கும் பத்துபேர்களில் எவரும் ஒத்த நிறத்தில் இல்லை. இது விந்தையான வேடிக்கை.

இதற்கெல்லாம் என்னக் காரணம் என்பதை ஆராயவேண்டி உள்ளது. இந்தியநாட்டின் பெரும்பகுதியை சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பலர் ஆண்டிருக்கிறார்கள். இதில் உள்நாட்டு அரசர்கள், அரசிகள் போக ஆசிய, ஐரோப்பிய, இஸ்லாமிய நாடுகளின் மன்னர்கள் ஒருவரை தொடர்ந்து மற்றவர் என ஆட்சி செய்திருப்பதை வரலாறு எடுத்துரைக்கிறது. அக்காலங்களில் இந்திய மக்கள் அடிமைகளாகப் பாவிக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளர். இந்தியப்பெண்களை சகட்டுமேனிக்கு பலநூறு ஆண்டுகள் பலநாட்டு மன்னர்கள் உறவுகொண்டு லட்சோப லட்ச வாரிசுகளை உருவாக்கிவிட்டுச் சென்றனர். இதற்காகவே இங்கு படையெடுத்துவந்தவர்களும் உண்டு.

முன்னொரு காலத்தில் காந்தர்வம் என கூறப்பட்ட ஆப்கானிஸ்தான் நாட்டிலிருந்து பலர் இந்தியா வந்து இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து சில மாதங்கள் குடும்பம் நடத்தி அனுபவித்து குழந்தைகள் கொடுத்துவிட்டுப்போனார்களாம். இவ்வாறு ஏற்பட்ட படுபயங்கரமான, கணக்குவழக்குகளே இல்லாத மனித கலவைகளின் விளைவே இப்போதுள்ள கோடி மனித நிறங்களுக்கான காரணங்களாக இருக்கவேண்டும். விஞ்ஞானி மெண்டல் அவர்களின் நெட்டை குட்டை கலப்பின இனப்பெருக்க விதிகளைப் படித்தவர்களுக்கு இது நன்றாகத் தெளிவாகும்.

அப்படிபார்க்கையில் நம் மூதாதையர்கள் யார், அவர்களின் யோக்கிதைகள் என்ன எனக்கேட்கவேண்டியிருக்கிறது. இங்கு ஒருவருக்கும் பலர் கூறிக்கொண்டிருக்கும் உருப்படியான கற்புகொண்ட முன்னோர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை என்று எண்ணும்படியாய் உள்ளது. ஆக நாம் அனைவரும் யார்? என்ன வகை என இப்போது உணரப்பட்டிருக்கும்.

ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான் பல சாதியப் பிரிவுகள், உட்பிரிவுகள் என எல்லாம் ஏற்பட்டிருக்கும் நிலை இருக்கிறது. வயிற்றுக்காக மதம் மாறியவர்கள் படுக்கைக்குப்போனவர்கள், கட்டாயமாக்கப்பட்டவர்கள், நம் முன்னனோர்களில் ஏராளம். இங்கு வளர்ந்த பலமதங்களின் மூதாதையர்கள் வேறு ஒரு மதத்தைச் சார்ந்தவராக இருந்துள்ளனர் என்பது பலர் அறிந்த மெய்.

இன்று இந்தியா இவ்வாறான மொழிகளைத் தாண்டி, மதங்கள், ஜாதிகள், உப்பிவுகள் என்ற பல கோடரி ஆயுதங்களால் பிளவுபட்டு ஒட்டுப்போடப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான மக்களிடம் தேசப்பற்று என்பது இல்லை. அதிலும் கிராமப்புறத்தினருக்கு இதைப்பற்றி அக்கறை அணுவும் இல்லை. அது என்னவென்றே தெரியாத கோடானகோடி மக்கள் உள்ளநாடு இந்தியா. அவரவர் மாநிலங்கள், சாதி, மதங்களைத் தாண்டி சிந்திக்கவோ, செயல்படவோ, எண்ணமும் விருப்பமும் இல்லாதவர்கள். விருப்பம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்களை வெறுப்பவர்களாக உள்ளது எவ்வகையில் நியாயம்! இதுவெல்லாம் என்றைக்கு மாறும் என இன்றைக்குத் தெரியவில்லை.

ஆயிரம் ஆயிரம் விதங்களில் இவர்கள் நடத்திக்கொள்ளும், கொல்லும் (மத) சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்கள், முரட்டு கொண்டாட்ட கேளிக்கைகள், காது கிழிக்கும் மேளதாளக் கச்சேரிகள், வானவேடிக்கைகள் போன்றவைகளும் பிரிவினைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உரமிட்டி தண்ணீர்பாய்ச்சி வளர்த்துவருகின்றன. அவ்வப்போது அன்னதானங்கள், தண்ணீர் பந்தல் போன்றவை நடக்கும். இவையெல்லாம் ஒருநாள், ஒரு வேலை கூத்துக்களாகத்தான். இதற்காக பலநாட்கள் பலபேர் உழைப்பார்கள்.

ஆனால் நம்மில் பலர் நெடுநாளைக்கு நீண்ட பயன்தரும் அவசியமானக் காரியங்களுக்கு சில நாட்கள்கூட உழைப்பதற்கு முன்வருவதில்லை. இதெல்லாம் எங்கு போய் முடியுமோ புரியவில்லை. இந்தியா முன்னேறுகிறது, இரண்டாயிரத்து இருபதில் வல்லரசு என்றெல்லாம் பெரியவர்களாலும், சிறியவர்களாலும் பகரப்படுகிறது. ஆனால் அவ்வளவு எளிதில் இது சாத்தியமே இல்லை. இந்தியா முன்னேறுவதை விட பல மடங்கு முன்னேறுவதற்கு பக்கத்து நாட்டுக்காரார்கள் பகலிரவாய் பணிசெய்து சரிபாதையில் உழன்றுகொண்டிருக்கிறார்கள். இதற்கு போட்டி போட வேண்டுமெனில் இங்குள்ள வம்பேறிகளும், சோம்பேறிகளும் அடியோடு ஒழியவேண்டும். ஒரு நாளைக்கு இருபத்தி நான்கு மணிநேரத்தில் தூக்கநேரம், மற்ற இத்தியாதைகளுக்கான நேரம்போக மீதமுள்ள நேரத்தில் எத்தனை மணி நேரத்தை உருப்படியானக் காரியங்களுக்கு உழைக்கிறோம் என்பதை ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே கணக்கிட்டுத் திருத்திக்கொள்ளும் காலம் வந்தாலன்றி இந்நாடு மற்ற வேகமாக வளரும் நாடுகளுடன் போட்டிபோட இயலாது.

அன்னதானம் அது இது என்ற பெயரில், உடல் திடகாத்திரமானவர்களுக்கு நன்றாக இயன்றவர்களுக்கு உழைக்காமல் உட்காரவைத்து உணவு அளிப்பது சரியாகுமா. இதற்கு பதிலாக முறையான முறைகளில் உழைக்க இயலாத ஊனமுற்றோர், வயோதிகர்கள், நோயாளிகள், ஆதரவற்ற சிறுவர்கள் போன்றோருக்கு உணவளித்து வாழ்வளிப்பது மிக்க நன்று.

துரதிஷ்டவசமாக இந்த நாட்டு மொத்த மக்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் என அனைவரும் லஞ்ச ஊழலில் ஈடுபாடாக்கிப்போனது மிகுந்த வருத்தத்திற்கு உரியது. எங்கேயும் எதிலும் லஞ்ச ஊழல் மிகுந்து, இவ்வகையில் உலகின் தனிச்சக்ரவர்த்தியாக திகழ்ந்து வருவதை எண்ணுகையில் உணர்வுகள் உள்ளோர் அழுதுபோவார்கள். அத்துடன் இது சிறிய நாடோ அல்லது குறைவான மக்கட்தொகைகொண்டதோ அல்ல. அனைத்தும் பெரியதாக உள்ளதால் மேற்படி கோரங்களின் தாண்டவத் தாக்கமும், அதன்விளைவுகளும் படுபயங்கரமாக வளம்வருகின்றன. எவருக்கும் எதற்கும் விளை கொண்ட நாடு இது. பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை இங்கு யாரேனும் அறியாமல் இருப்பார்களேயானால் அவர்கள் பைத்தியக்காரர்களாகத்தான் இருப்பர்.

எல்லா இனங்களிலும் தங்களை விட தகுதியானவர்களை முந்தி, குறுக்குவழியில் காரியம் சாதித்து முன்னேறத்துடிக்கிற மனநிலையில் உள்ள மொத்த மக்கள் இங்கு அமைந்துவிட்டது பெரும் பாவம். தகுதி உள்ளவர்கள் வரிசையை, வருகையை எதிர்க்கும் தகுதியில்லாத மக்கள் இவர்கள். இதற்கெல்லாம் பல காரணங்கள் இருப்பினும் அரசியல்வாதிகளே முதல் காரணவாதிகளாகத் திகழ்கின்றனர்.

நாட்டுப்பற்று, அன்பு, சேவை மனம், கொள்கை கோட்பாடு இல்லாத முரட்டு குணம், சுயநலம் மட்டும் மிகுந்து லஞ்ச ஊழலை பெரிதும் விரும்பும் அரசியல் வியாபாரிகள் இங்கு பெரிதும் பெருகிவிட்டனர். இது இடைநிலை மற்றும் கடைநிலைகளில் மிகமிக அதிகம். அரசியல் என்றால் அவசரத்தில் அதிகமாக சம்பாதிக்கும் சாத்தியம் உள்ள அரசு இலாக்கா என வகைப்படுத்திக்கொண்டார்கள்.

இப்போது எல்லா கட்சிக்காரர்களும் பங்குபோட்டுக்கொள்வதால் அவர்களுக்குள் மேற்படி விடயத்தில் பிரச்சினைகள் வருவதில்லை. எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அனைவருக்கும் அறுவடை நடந்தேறுகிறது. அச்சமய ஆளுங்கட்சிக்காரர்கள் கூடுதல் பங்கைப் பெறுகிறார்கள். இங்கே எவனுக்கும் இதைக்கேட்கும் உரிமை இல்லை. மீறி நடந்தால் அடித்து துன்புறுத்தப்பட்டு கொலைவரை செய்யப்படுவான். இதற்கு விடிமோட்சம் என்பதுபோல் ஏதாவதொன்று இருக்குமாயின், மக்கள் நினைத்தால் முடியும்.

அதற்கு முதலாவதாக அனைத்து மக்களும் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும். கட்சி, அதன் பரிமாணம், சின்னம், தலைவர், அன்பளிப்புகள், விளம்பர தந்திர யுத்திகள், ஏமாற்று வாக்குறுதிகள் போன்றவற்றை ஒதுக்கிவிட்டு அவரவர் பகுதியில் நிற்கும் வேட்பாளர்களில் ஓரளவிற்கு பரவாயில்லை என நினைக்கப்படுகிறவர்களுக்கு வாக்களியுங்கள். இதன் காரணத்தினால் காலப்போக்கில் போகப்போக நல்ல வேட்பாளர்களை கட்சிகள் தேடிப்பிடித்து தேர்தலில் நிறுத்தி நமக்கு நல்ல பிரதிநிதிகள் கிடைக்க நல்ல வாய்ப்பு வந்துவிடும்.

அரசியலில் இருந்து அதிக வயதானவர்கள் அதிலும் குறிப்பாக நிற்க, உட்கார, நடக்க, பேசமுடியாதவர்கள் தாங்களாகவே ஒதுங்கிக்கொண்டு நடுத்தர வயதுக்காரர்களை முன்னிறுத்த வேண்டும். இளைஞர்களைவிட இவர்களுக்கு அனுபவம், பக்குவம், சாமர்த்தியம் கூடுதல் நிலையில் இருக்குமாதலால் நன்றாகச் செயல்பட வாய்ப்புகள் இருக்கின்றன.

சாதாரண அற்பஅரசு வேலைகளில் கூட பணிமூப்பு ஓய்வுக்கு வயது வரம்பு வைத்து அந்த வயது வந்தவுடன் அவர்களை அனைத்திலும் குறைந்துபோனவர்கள் எனக்கருதி வெளியே அனுப்பிவிடுகின்றனர். இது பெரும்பகுதி நியாயமே. அதேபோல் பல மடங்கு பலவகை பலம் தேவைப்படும் அரசியலுக்கு கிழவர், கிழவிகள் எப்படிப் பொறுத்தமாகப் படும். இதைப்பற்றி பலர் பேசும்போது அவர்களுக்கு மதிநுட்பம் அதிகம் அதனால் அவர்கள் அரசியலில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படியாயின் அரசியலில் உள்ளவர்கள் மட்டும் வயதானபின்பும் மதிநுட்பம் உள்ளவர்கள். மற்ற துறைகளில் வயதானவர்கள் மதிநுட்பம் குறைந்த இயலாதவர்களாகிறார்கள். மேலும், இளைஞர்கள் நடுப்பருவ மனிதர்கள் இவர்களைவிட மூளை குறைந்தவர்களா !

வயது குறையக் குறைய மனிதச் செயல்களின் முக்கியக் கேந்திரமான மூளைச் செயல்பாடுகளின் வீரியம் குறைந்துகொண்டுவருகிறது என அதிகாரப்பூர்வமான மருத்துவ அறிவியல் அறிவுறுத்தி வருகிறது. வேண்டுமெனில் எல்லா இனங்களில் உள்ளதுபோல் இங்கேயும் சில விதிவிலக்குகள் இருக்கலாம். என்றபோதிலும் இந்த மொத்த வயதான அரசியலார்கள் அகலுவதாயில்லை. மற்றவர்களுக்கு இவர்களும், அவர்களும் இறக்கும்வரை இடம் கொடுப்பதில்லை.

உண்மையைச் சொல்லப்போனால் மற்ற எத்துறைகளையும்விட அரசியலுக்கு வயதுவரம்பு அவசியமாகிறது எனக்கூறலாம். உலகில் உச்சானிகொம்பில் உள்ள அமெரிக்காவில் ஒரு ஜனாதிபதி இரு நான்கு ஆண்டுகளுக்கு மேல் பதவியில் இருக்க இயலாது. அதன்பிறகு வீட்டிற்குப்போய் வேறுவேலையைப் பார்க்கிறார்கள். அதுபோல இந்தியாவிலும் இந்தியா போன்ற வேறுநாடுகளிலும் இம்மாதிரியான அறிவுப்பூர்வமான மாறுதல்கள் வரவேண்டும். இது ஒரு காலக்கட்டாயம்.

மனமிருந்தால் மார்க்கம் உண்டு. இந்தியாவில் நிலவும் ஒட்டுமொத்த லஞ்ச ஊழலையும் ஓரிரு மாதங்களிலேயே ஒழித்து மூட்டைக்கட்டிவிடலாம். அதற்கு அருமையான உபாயங்கள் உள்ளன. நடைமுறைப்படுத்துவதற்குத் தலைமைகள் தயாராக இருந்தால் நிச்சயம் சீர்படுத்த முடியும். இதில் மாற்றம் வந்துவிடுமானால் அனைத்தும் ஒழுங்குக்கு வந்துவிடும். தேவையற்றவர்கள் அரசியலுக்கு வரமாட்டார்கள். சேவை மனம் கொண்டவர்களே ஏற்கப்படுவார்கள்.

அரசியலார், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் என எவருடைய குடும்பத்தின் உறுப்பினர்களும் லஞ்சபணத்தில் மகிழ்ந்து, கொண்டாடிக் கூத்தடித்து ஆனந்தமயமாகும் அவலம் மறைய வேண்டும். இவற்றிற்கு மனிதர்களின் மனநிலை முதலாவதாக மாறவேண்டும். எக்ஸ்ட்ரா ஏதாவது கிடைக்குமா, இன்றைக்கு எவ்வளவு தேரும், வரும் என தனிநபர் முதல் மனைவி / கணவன் மற்றும் மொத்த குடும்பமும் எதிர்பார்ப்பதை முதலில் கேவலமாக நினைக்கும் மனம் வேண்டும்.

இங்கு தற்போதைக்கு லஞ்சம் கிடைக்கும் சூழ்நிலையில் உள்ளவன் அயோக்கியனாகவும், அச்சூழ்நிலை கிடைக்கப்பெறாதவன் யோக்கியனாகவும், பின்னவன் முன்னவனை மன வெறுப்பில், பொறாமையில் குறைசொல்கிற மாதிரியும் சூழ்நிலை இருக்கிறது. உண்மை என்னவெனில் பின்னவனுக்கும்கிடைத்தால் முன்னவனைவிட கூடுதலாகவே ஆசைகொள்வான். இந்த வியாதிக்கு மருந்து வெளியில் கிடைக்காது. மனித மனங்களில் தான் இருக்கிறது. அங்கு கிடைக்கவில்லை எனில் சட்டம் என்னும் சவுக்கை சரிவரச் சுழற்றினால் சகலமும் சரியாகிவிடும்.